ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2438/13 - 2025 මැයි මස 27 වැනි අඟහරුවාදා - 2025.05.27
*2438/13 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (262 ஆம் அத்தியாயம்)**

**76அ ஆம் பிரிவின் கீழான கட்டளை**

உள்ளூரதிகார சபைகள் தேர்தல் முடிவுறுத்தப்பட்டு பெறுபேறுகள் வெளியிடப்பட்டதன் பின்னர் ஒவ்வொரு கட்சியினாலும் / குழுவினாலும் குறித்த கட்சிக்கு அல்லது குழுவிற்கு உரியவாறு பெண் உறுப்பினர்கள் உள்ளிட்ட தெரிந்தெடுத்து அனுப்பி வைக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு தேர்தல் முடிவடைந்தவுடனேயே அறிவிக்க வேண்டியிருந்த போதும், தேர்தல் முடிவுற்று இற்றைக்கு 21 நாட்கள் கடந்துள்ள நிலையில் குறித்த தெரிந்தெடுத்து அனுப்பி வைக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் தொடர்பாக இதுவரை தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்படவில்லை என்பதனாலும்,

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சரின் 2424/02 ஆம் இலக்க மற்றும் 2025.02.17 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 2025.06.02 ஆந் திகதியன்று உள்ளூரதிகார சபைகளின் பதவிக் காலம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென நியமிக்கப்பட்டுள்ளமையாலும்,

விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரது கட்டளையின் பிரகாரம், உள்ளூரதிகார சபைகளின் பதவிக் காலம் ஆரம்பிப்பதற்கு முன்பாக தெரிவு செய்யப்பட்டுள்ள மற்றும் தெரிந்தெடுத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பெயர்கள் வர்த்தமானி

1A - G 44436 — 14 (2025/05)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அறிவித்தலில் பிரசுரிக்கப்பட வேண்டியுள்ளதனால், ஒவ்வொரு கட்சியும், குழுவும் தெரிந்தெடுத்து அனுப்ப வேண்டிய உறுப்பினர்கள் அனைவரின் பெயர்களையும் 2025.05.30 ஆந் திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு முன்பாக உரிய உள்ளூரதிகார சபைகளின் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டுமென இத்தால் கட்டளை இடுகின்றோம்.

**ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க**,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

**எம். ஏ. பீ. சீ. பெரேரா**,
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**அமீர் பாயிஸ்**,
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**ஏ. சண்முகநாதன்**,
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

பேராசிரியர் **லக்ஷ்மன் திசாநாயக்க**,
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல்கள் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2025, மே 27.

EOG 05-0181